# 2011 - 2012 ஆம் ஆண்டறிக்கை

## தொன் போஸ்கோ அன்பு இல்லம், சேலம் - 7

தொன் போஸ்கோ அன்பு இல்லத்தின் 24வது ஆண்டு விழாவிற்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் மனமகிழ்வோடு வரவேற்று அன்பு இல்லத்தின் 2011- 2012 ஆம் ஆண்டிற்கான அறிக்கையை உங்கள் முன் சமர்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தொன் போஸ்கோ அன்பு இல்லம் 1989 ஆம் ஆண்டு சாலைவாழ் சிறார்களின் மறுவாழ்விற்காக ஆரம்பிக்கப்பட்டது. பின்பு குழந்தை தொழிலாளர்கள், பல்வேறு காரணங்களால் வீட்டை விட்டு வெளியேறிய குழந்தைகள், ஆதரவற்ற குழந்தைகள் என்று இலக்கு விரிவாக்கப்பட்டு இன்று சேலம் மாவட்டத்தில் தொன் போஸ்கோ அன்பு இல்லம் அடிவாரம், தொன் போஸ்கோ அன்பு இல்லம், முள்ளுவாடிகேட், தொன் போஸ்கோ அரவணைப்பு இல்லம், நிலவாரப்பட்டி ஆகிய மூன்று இல்லங்களின் மூலம் குழந்தைகளின் வளர்ச்சிக்காக அரும் பணியாற்றி வருகிறது. இம்மூன்று இல்லங்களிலும் தங்கி பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை 125 ஆகும். இம்மாணவர்கள் புனித பால் மேல்நிலைப்பள்ளி, வினாயகம் பட்டி அரசு நடுநிலைப் பள்ளி, தாசநாயக்கன்பட்டி உயர்நிலைப் பள்ளி, புனித தெரசாள் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் ஊளுஜ கொங்கு, சேலம் தொழில் நுட்ப கல்லூரிகளிலும் பயின்று வருகின்றனர். இது மட்டுமல்லாது தொன் போஸ்கோ அன்பு இல்லம் குழந்தைகளை மையமாகக்கொண்டு அவர்களின வளர்ச்சிக்காக கீழ்காணும் பல்வேறு பணிகளை செய்து வருகிறது.

**குழந்தை உரிமைகள் பாதுகாப்பு மையம்:**

குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு மையமானது 1998 ஆம் ஆண்டு சேலம் புதிய பேருந்து நிலையத்தில் துவங்கப்பட்டது. இம்மையத்தின் மூலமாக சேலம் மாநகரத்திற்கு ஓடி வரும் குழந்தைகளையும், வழித்தவறிய சிறார்களையும் மீட்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளித்து வருகிறது. இம்மையம் கடந்த 14 ஆண்டுகளாக மூன்று பணியாளர்களின் உதவியோடு 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. இதுவரை இம்மையத்தின் மூலம் 7,494 குழந்தைகள் மீட்கப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டு இருக்கிறது.

கடந்த ஆண்டு மட்டும் இம்மையத்தின் மூலம் பயன் பெற்றவர்கள்:

1. மீட்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை - 374
2. வீடு சேர்க்கப்பட்டவர்கள் - 182
3. சைல்டு லைன் 1098க்கு அனுப்பட்டவர்கள் - 192
4. மனநல ஆலோசனை வழங்கி வீட்டிற்கு அனுப்பியவர்கள - 182
5. காணமல் போனவர்கள் பற்றிய தகவல் பெறப்பட்டது - 18

**மாலை நேர வகுப்புகள்:**

சேலம் மாநகரில் உள்ள 02 குடிசை பகுதிகளை கண்டறிந்து அப்பகுதியில் வாழ்கின்ற குழந்தைகளுக்கு தரமான கல்வி வழங்கவும் தொடர்ந்து பள்ளி செல்வதை கண்காணிக்கவும், உயர் கல்வி பெறுவதற்கான வாய்ப்புகள் உருவாக்கவும் இம்மாலை நேர வகுப்புகள் நடத்தபடுகின்றன. இதன் மூலம் ஏறக்குறைய 380 மாணவ மாணவிகள் பயன்பெற்று வருகின்றனர்.
Rasi puram

**பள்ளி இடைவிலகல் மையம்:**

கடந்த 5 ஆண்டுகளாக பள்ளி இடைவிலகல் மையமானது பள்ளி இடை நின்ற மற்றும் அரசு தேர்வுகளில் தேர்ச்சி பெறாத மாணவ மாணவிகளின் வளர்ச்சிக்காக சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் அரசு பொதுத் தேர்வுகளான 8, 10 மற்றும் 12 ஆம் வகுப்பிற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இம்மையத்தின் மூலம் இதுவரை 193 மாணவ மாணவிகள் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்று தங்களுடைய மேல்கல்வியை பயின்று வருகின்றனர். இவ்வாண்டு 44 மாணவ மாணவியர் அரசு பொதுத் தேர்வை எதிர்க்கொண்டு 21 மாணவ மாணவிகள் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்று இருக்கிறார்கள்.

**தொழிற்கல்வி மையங்கள்:**

**1. தையற்பயிற்சி மையம்:**

தொன் போஸ்கோ அன்பு இல்லத்தின் சார்பில் சன்னியாசிகுண்டில் உள்ள அசிசி இல்ல அருட்சகோதரிகளுடன் இணைந்து இளம்பெண்களுக்காக தையற்பயிற்சியும், கைவினை தயாரிப்பு பயிற்சியும் நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் 32 இளம்பெண்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். பயிற்சி முடிந்த பிறகு அவர்களை அருகில் உள்ள ஆயத்த ஆடைகள் நிறுவனங்களில் பணிக்கு அமர்த்துவதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

**2. இலங்கை அகதிகளுக்கான சிறப்பு தையற்பயிற்சி:**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் மற்றும் திருச்சி மாவட்டம் குளித்தலை இலங்கை அகதிகள் முகாம்களில் வசித்து வரும் இளம்பெண்களுக்காக 1 வருட சிறப்பு தையற்பயிற்சி மற்றும் கை வினை தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் தாரமங்கலத்தில் 44 பேரும், குளித்தலையில் 36 பேரும் பங்கேற்று பயனடைந்தனர். பயிற்சியின் முடிவில் அனைவருக்கும் சான்றிதழும், தையல் இயந்திரமும் வழங்கப்பட்டது.

**3. கணிணி பயிற்சி மையம்:**

இவ்வாண்டு தொன் போஸ்கோ அன்பு இல்ல இடைவிலகல் மையத்தில் பயிலும் மாணவ மாணவிகளுக்கும், குடிசை பகுதிகளில் 10 ஆம் வகுப்பிலிருந்து கல்லூரி வரை படிக்கும் மாணவ மாணவிகளுக்காகவும் மூன்று மாதம் சிறப்பு கணிணி பயிற்சியானது TCPS நிறுவனத்தோடு இணைந்து அனுபவமிக்க பயிற்சியாளர்களால் நடத்தப்பட்டது. பயிற்சியின் முடிவில் அரசு அங்கிராம் பெற்ற சான்றிதழ் வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் 112 மாணவ மாணவிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

**சமுதாயம் சார்ந்த மக்கள் குழு ஒருங்கிணைப்பு பணி:**

தொன் போஸ்கோ அன்பு இல்லத்தின் பணித்தளங்களான 12 குடிசை பகுதியிலுள்ள குடிசை வாழ் மக்களின் சமூக பொருளாதார கலாச்சார மேம்பாட்டிற்காகவும் அவர்களை மனித மாண்புடன் வாழ வழி செய்யவும் அவர்களை பல்வேறு குழுக்களாக ஒருங்கிணைத்து தேவையான பயிற்சி அளித்து மக்கள் சக்தியை ஒருங்கிணைக்கும் முயற்சியல் ஈடுபட்டு வருகிறது.

**1. அக்கம் பக்கத்து குழந்தைகள் பாராளுமன்றம்:**

குழந்தைகளை குழுக்களாக ஒருங்கிணைத்து சமூக பிரச்சினைகளில் அக்கறையுள்ளவர்களாகவும், தங்களின் திறன்களை வளர்த்துக்கொள்ளவும், தங்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளை மாவட்ட நிர்வாகம் வரை கொண்டுசென்று தீர்க்கக்கூடிய குழந்தைகளுக்கான கூட்டமைப்பே இந்த அக்கம் பக்கத்து குழந்தைகள் பாராளுமன்றம். இதுவரை 320 உறுப்பினர்களை கொண்டு 12 குழந்தைகள் பாராளுமன்றம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மாவட்ட, மாநில அளவில் பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்களை ஒருங்கிணைத்து செயல்பட்டு வருகிறது. தொன் போஸ்கோ அன்பு இல்லம் சேலம் மாவட்ட குழந்தைகள் பாராளுமன்ற கூட்டமைப்பின் அமைப்பாளராக செயல்படுவது குறிப்பிடத்தக்கது.

**2. இளையோர் குழுக்கள்:**

தொன் போஸ்கோ அன்பு இல்லத்தின் பணித்தளங்களில் இளைஞர்களையும், இளம்பெண்களையும் 24 குழுக்களாக ஒருங்கிணைத்து, சிறப்பு பயிற்சிகள் அளித்து அவர்களின் சமூக பொருளாதார கலாச்சார மேம்பாட்டிற்கு உழைப்பதோடு அல்லாமல் அவர்களை ஆளுமை திறன் பெற்றவர்களாகவும் சமூதாயத்தில் மாற்றத்தை கொண்டுவரும் சக்திகளாக உருவாக்குவதில் பெரும் பங்காற்றி வருகிறது.

**3. மகளிர் சுய உதவி குழுக்கள்:**

பொருளாதாரத்தில் பின் தங்கிய 12 குடிசை பகுதிகளில் வாழ்கின்ற மகளிரை இனம் கண்டு அவர்களை 21 குழுக்களாக ஒருங்கிணைத்து அவர்கள் வாழ்வில் முன்னேற தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டது. குறிப்பாக சுயத்தொழில் துவங்க ஊக்கப்படுத்தியதன் மூலம் கடந்த ஆண்டு இக்குழுக்களில் உள்ள 18 மகளிர் ஒன்றிணைந்து சுயதொழில் தொடங்கி அதன் மூலம் பயனடைந்து வருகிறார்கள்.

**4. மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கம்:**

குடிசை வாழ் இளையோர்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கு சமூக பகுப்பாய்வு பயிற்சி அளித்து சாதிய அடக்குமுறை, காவல்துறை அத்துமீறல், மக்கள் வாழ தேவையான அடிப்படை வசதியின்மை போன்ற பிரச்சனைகளை எதிர்த்து போராடவும் மேலும் மக்கள் கண்காணிப்பகம் என்ற அமைப்புடன் இணைந்து இவர்களை மனித உரிமை ஆர்வலராக செயல்படவும் முயன்று வருகிறது. இதுவரை 72 உறுப்பினர்கள் இவ்வியக்கத்தில் சேர்ந்து மனித உரிமை ஆர்வலராக செயல்படுகின்றனர்.

**5. தமிழ்நாடு அன்னை தெரசாள் கட்டிட மற்றும் அமைப்பு சாரா நல சங்கம்: (பதிவு எண் 129/SLM)**

பொதுவாகவே கட்டிட மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கென்று பணி பாதுகாப்போ, ஓய்வூதிய பலன்களோ, இழப்பீடுகளோ, அரசு நலத்திட்ட உதவிகளோ பெற முடியாத சூழ்நிலையில் இவர்களும் அரசின் எல்லா நலத்திட்ட உதவிகளும் பெற்று நலமோடு வாழவேண்டும் என்பதற்காக தொடங்கப்பட்டதே அன்னை தெரசா கட்டிட மற்றும் அமைப்பு சாரா சங்கம். இதுவரை 245 தொழிற்சங்க உறுப்பினர்களுடன் இச்சங்கம் செயல்பட்டு வருகிறது. இவ்வாண்டு புதிய உறுப்பினர்களாக சேர்ந்தவர்கள் 85 பேர். 18 உறுப்பினர்கள் அரசின் நலத்திட்ட உதவிகளை அடைந்து பயன்பெற்றுள்ளனர்.

**சைல்டு லைன் 1098**

குழந்தை உரிமை மீறல்களையும், குழந்தைகளின் பிரச்சனைகளை வெளிக்கொணரவும் மத்திய அரசின் கீழ் இயங்கும் குழந்தைகள் மற்றும் பெண்கள் நல அமைச்சகத்தின் உதவியோடு செயல்படுவதே சைல்டு லைன் 1098 குழந்தைகளுக்கான இலவச அவசர தொலைபேசி சேவை மையம். இது பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்ற குழந்தைகளை மீட்பதற்கு 10 பணியாளர்களின் உதவியோடு 24 மணி நேரமும் குழந்தைகளின் உரிமைகளை காக்கவும் அவர்களின் நலனுக்காக பணிசெய்யும் அமைப்பாகும்.

இதன் மூலம் கடந்த ஆண்டு பயனடைந்தவர்களின் விவரம்:

| | | | |
|---|---|---|---|
| 1. | மொத்த தொலைபேசி அழைப்புகள் பெற்றது. | - | 15,532 |
| 2. | மீட்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை | - | 534 |
| 3. | உறைவிடம் வசதி பெற்றவர்கள் | - | 302 |
| 4. | வீடு சேர்க்கப்பட்டவர்கள் | - | 124 |
| 5. | வன்முறையிலிருந்து மீட்கப்பட்டவர்கள் | - | 55 |
| 6. | வேறு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டவர்கள் | - | 24 |
| 7. | மனநல ஆலோசனை பெற்றவர்கள் | - | 29 |

**குழந்தைகள் நல குழுமம் மற்றும் அரசு வரவேற்பு இல்லம்:**

ஆதரவு மற்றும் பாதுகாப்பு தேவைப்படுகின்ற ஆண் குழந்தைகளுக்கான அரசு வரவேற்பு இல்லம் தமிழக அரசின் ஆணைப்படி தொன் போஸ்கோ அன்பு இல்லத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் மீட்கப்படுகின்ற குழந்தைகள் அரசு குழந்தைகள் நலக்குழுவின் மூலமாக விசாரிக்கப்பட்டு, அவர்களின் ஆலோசனை மூலம் மறுவாழ்வு பெற்று வருகின்றனர். இதன் மூலம் கடந்த ஆண்டு பயன் பெற்றவர்கள் 68 பேர்.

## Home Link:

Home Link என்ற மென்பொருள் வழியாக காணாமல் போன மற்றும் மீட்கப்படுகின்ற குழந்தைகள் பற்றிய விவரம் கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் தொன் போஸ்கோ அன்பு இல்லத்தில் பதிவு செய்யப்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்களின் சேவைக்காக காணமல் போன குழந்தைகளை பற்றிய விவரம் அறிய www.missingchildsearch.net என்ற இணையதளம் பயன்படுகிறது.

இவ்வாண்டு Home Link என்ற இணையத்தளத்தில் பதியப்பட்ட குழந்தைகளின் விவரம்:

| | | | |
|---|---|---|---|
| 1. | பதிவு செய்யப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை | - | 623 |
| 2. | இதில் ஆதரவற்ற குழந்தைகளின் எண்ணிக்கை | - | 595 |
| 3. | ஆதரவு உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை | - | 32 |
| 4. | காணாமல் போன குழந்தைகள் பற்றிய தகவல் | - | 16 |
| 5. | கண்டுபிடிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை | - | 1 |

**குழந்தைகளுக்கான கோடை முகாமும் சிறப்பு பயிற்சிகளும்:**

குழந்தைகளின் திறன் வளர்க்கவும், அவர்களை ஆளுமைத்திறன் கொண்டவர்களாக உருவாக்க அன்பு இல்ல மாணவர்களுக்கு அடிவாரத்திலும், JJB Home-ல் உள்ள குழந்தைகளுக்கு JJB Home-மிலும் மற்ற குழந்தைகளுக்கு அவர்களுடைய பகுதிகளிலும் மே

மாதம் 2 ஆம் தேதி முதல் 15 ஆம் தேதி வரை கோடை முகாம் நடைப்பெற்றது. இதில் பல்வேறு திறன் வளர்க்கும் போட்டிகள், மேலும் Salem Historical Society என்ற அமைப்போடு சேர்ந்து சேலம் மாநகரில் உள்ள வரலாற்று சிறப்பு பகுதிகளை மாணவர்கள் கண்டுகளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இவைதவிர கலை பயிற்சி, கல்வி உரிமைக்கான சட்ட பயிற்சி மற்றும் தகவல் அறியும் உரிமை பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் ஏறக்குறைய 380 குழந்தைகள் பங்கேற்று பயனடைந்தனர்.

**பணியாளர்களுக்கான சிறப்பு பயிற்சியும் இன்பச் சுற்றலாவும்:**

தொன் போஸ்கோ அன்பு இல்ல பணியாளர்கள் தங்களுடைய திறன்களை வளர்த்துக்கொண்டு திறம்பட பணியாற்ற வேண்டும் என்ற நோக்கோடு அவர்களுக்கு Right to Information Act, Inter Personal & Communication Skill, Technique for Resource Mobilization, Telecommunication Skill, JJ Act, Managerial Skills போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டது. கடந்த ஆகஸ்டு 1 முதல் 3 ஆம் தேதி வரை கேரள மாநிலத்தில் உள்ள ராஜகிரி தொண்டு நிறுவனத்திற்கு சென்று அனுபவ பயிற்சி பெறப்பட்டது. அதன் பிறகு கொச்சின் துறைமுகம், அதிரம்பள்ளி நீர்வீழ்ச்சி போன்ற இடங்களுக்கு சென்று மகிழ்ந்தனர்.

**சென்ற ஆண்டு நடந்த சிறப்ப நிகழ்ச்சிகள்:**

1. 15 பீகார் சிறுவர்களை மீட்டெடுத்து வீடு சேர்த்தது.
2. பள்ளி சேர்க்கை பிரச்சாரம்
3. திருச்சி சலேசிய மாநில அளவிலான குழந்தைகள் பாராளுமன்ற மாநாடு
4. புனித தொன் போஸ்கோ திருகரம் சேலம் மாநகருக்கு வருகை
5. பள்ளிகளில் குழந்தை உரிமை குழுக்கள் அமைத்தல்
6. 55 குழந்தை திருமணங்கள் தடுக்கப்பட்டன.
7. குழந்தை தொழிலாளர்களை மீட்டெடுத்து பள்ளியில் சேர்க்கப்பட்டனர்
8. குழந்தைகள் பிச்சையெடுப்பதை தடுத்தல் (Beggars Drive)
9. தொன் போஸ்கோ Feast Day Celebration
10. சைல்டு லைன் 10 ஆம் ஆண்டு விழா
11. குழந்தை உரிமைகள் மாநாடு
12. சேலம் மாவட்ட குழந்தை பாராளுமன்ற கூட்டமைப்பின் குழந்தைகள் கலை விழா

கடந்த ஆண்டு முழுவதும் எங்களுடைய பணிகளை சிறப்பாக செய்ய நிதி உதவி செய்த ஊழசனயனைஇ நேவாநசடயனெஇ நிறுவனத்தாருக்கும் மத்திய அரசின் குழந்தைகள் மற்றும் பெண்கள் நல அமைச்சகத்திற்கும், திருச்சி சலேசிய மாநில தலைவர் மற்றும் ஆலோசகர்கள், சலேசியர்கள், அரசு அதிகாரிகள், தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் நல விரும்பிகள், உபகாரிகள், தொன் போஸ்கோ உடன் உழைப்பாளர்கள், தொன் போஸ்கோ அன்பு இல்ல முன்னாள் மாணவர்கள், சேலம் மாவட்ட குழந்தை பாராளுமன்ற கூட்டமைப்பு உறுப்பினர்கள், அன்பு இல்ல பணியாளர்கள், ஊடகத்துறை நண்பர்கள் மற்றும் கடந்த ஆண்டு முழுவதும் எங்களோடு தங்கி எங்கள் பணியில பங்கெடுத்த செல்வி. சீனா, செல்வி. எஸ்கா அவர்களுக்கும் எங்களுடைய இதயம் கனிந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி – வணக்கம்